மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S.No.88/2019

வாக்குமூலம்: பி.வா.சா.2 – கருப்புச்சாமி
29.10..2025:

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை** : 2 ஆம் பிரதிவாதி இவ்வழக்கில் பி.வா.சா.ஆ.1 ஆக விசாரிக்கப்பட்டு எனக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளித்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வருவாய் துறை ஆவணங்களில் கோவில் வீட்டிற்கு வடபுறமும், தென்புறமும், மேல்புறமும் சர்வே எண்.829/10 பொதுப்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை சர்வே எண்.829/10 பொதுப்பாதையாக இல்லை. சர்வே எண்.829/10 ல் 0.01.77 ஹெக்டேரில் 0.00.19 சதுர மீட்டரில் நான் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளேன் என்றால் இல்லை, அது கோவில் வீடு ஆகும். கோவில் வீடு சர்வே எண்.829/11 என்றால் இல்லை நான் சர்வே எண்.829/10 ல் தான் வசித்து வருகிறேன். 19.12.2004 ஆம் ஆண்டு 2 ஆம் பிரதிவாதி நான் சர்வே எண்.829/10 ல் ஆக்கிரமித்து குடியிருந்து வருவதை வட்டாட்சியரிடம் மனு கொடுத்து மேற்படி மனுவின் பேரில் விசாரணை நடத்த எனக்கு வட்டாட்சியரிடமிருந்து அறிவிப்பு அனுப்பிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.829/10 ல் பொதுப்பாதை என்றாலும் சர்வே எண்.829/11 கோவில் வீடு என்றாலும் நான் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு சர்வே எண்.829/10 ஆனது அரசாங்கத்தால் இலவசமாக கொடுக்கப்பட்ட வீட்டு மனை என்றாலும், அதற்கு அரசாங்கத்தால் பட்டா கொடுக்கப்பட்டள்ளது என்றாலும் சரிதான். இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledge by him/her to be correct

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2025.10.17 15:21:12 +0530

District Munsif,
Palani.